1993 ஏப்ரல் 26]

ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்புச்செய்து கம்பல்சரி குயூசேஷன் செய்ய ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அரசுக்குப் பரிந்துரை செய்து இருப்பதாக தகவல் தெரிய வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆவன செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கைகளை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அறிவித்திருப்பதைப் போல் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த 500 பேருக்கு மனைப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 479, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

479—

பெரியகல்வராயன் மலையில் பழப்பண்ணை அமைத்தல்.

*9453—திரு. வெ. தமிழரசு :
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியகல்வராயன் மலையில் மலைவாழ் மக்களுக்கு பயன் ஏற்படும் வகையில் பழப்பண்ணை அமைக்கப் படுமா —

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே,

இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் ஒரு முறை கூட நமது இயக்கம் வெற்றி பெற இயலவில்லை. ஆனால் நம்முடைய இதய தெய்வத்தின்

அரசியல் வாரிசு, நம்முடைய கழகக் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் சட்டமன்ற உறுப்பினர் என்ற பாக்கியத்தை (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இத்தொகுதியில் பெற்றுக் கொடுத்த இதய தெய்வத்தின் பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கை யாக்கி, நம்முடைய ஆனந்தமான, புன்னகை, மன்னனான, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலிப் பாரா எனப் பணிவோடு வேண்டுகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படு கிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன கல்வராயன் மலையில் ஒரு மாபெரும் பழப் பண்ணை சிறிய முறையில் இயங்கி மலை வாழ் மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பினையும், தொழில் நுட்பங்களையும் வழங்கி வருகிறது. அதேபோன்று, பெரிய கல்வராயன் மலையில் தோட்டக்கலை துறையின் மூலம் ஒரு பெரிய பழப்பண்ணை அமைக்க வேண்டுமானால் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இந்த அள வுக்குப் பெரிய அளவில் கல்வராயன் மலையில் நிலம் கிடைக் காததால், அங்கே ஒரு பழப்பண்ணை அமைக்கும் சாத்தியக் கூறு இல்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெரிய கல்வராயன் மலையில் பழப் பண்ணை ஏற்படுத்த போதிய சீதோஷ்ணநிலை உள்ளதாலும் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட இடத்தை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஏற்காடு சட்டமன்ற உறுப்பின ரும், நானும் நேரில் சென்று தேர்வு செய்துள்ள அந்த இடத்தில் பழப் பண்ணை ஏற்படுத்த டி.டி.சி.——-இல் தீர் மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, இதை மீண்டும் பரிசீலித்து இந்த மலைவாழ் மக்கள் நலன் கருதி இதைச் செய்யவேண்டுமாறு பணிவோடு வேண்டு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் ஏக்கர் இடம் கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 480, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

480—

வெட்டன்விடுதியில் புதிய பிற்பட்டோர் நலவிடுதி கட்டும் திட்டம்.

*11178—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் உள்ள வெட்டன்விடுதிக்கு புதியதாக பிற்பட்டோர் நல விடுதி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம் வெட்டன்விடுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி இல்லாததால் விடுதிக்கு கட்டிடம் கட்டுவது என்பது எழவில்லை.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதியில் உள்ள வெட்டன் விடுதியில் ஆதிதிராவிட நலத்துறையிலே ஒரு மாணவர் விடுதி இயங்கிக் கொண்டு இருக்கிறது. அங்கேயுள்ள உயர்நிலைப் பள்ளியில் 400 மாணவர்கள் படித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த மாணவர் விடுதியில் 4 பேரைத்தான் பிற்பட்ட வகுப்பிலேயிருந்து சேர்க்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. வருகின்ற நிதி ஆண்டிலிருந்து அந்த மாணவர் விடுதியிலே 19 சதவீதம் சீட்டுகளை அதிகரித்து, பிற்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கித் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடங்களிலே விடுதி கட்டப்பட வேண்டுமென்றால், கட்டிட உரிமையாளரால் வழக்கு தொடுத்து காலி செய்யச் சொன்னாலும், கட்டிட உரிமையாளர் காலி செய்ய வற்புறுத்தினாலும் மட்டுமே அந்த இடங்களிலே விடுதி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.